பதிலுரையும் மற்றும் இ.ம.எண்.02/2023 ல் எதிருரையும் தாக்கல் செய்ய கடந்த 15.12.2023 ம் தேதியில் வாய்தா போடப்பட்டு, அன்றைய தினம் மனுதாரர்கள் பதிலுரை மற்றும் எதிருரை தாக்கல் செய்யாததால் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

(ii) கடந்த டிசம்பர் 2023 முதல் வாரத்தில் 1 ம் மனுதாரருக்கு திடீரென வைரஸ் காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்பட்டு, ஒரு வாரத்திற்கும் மேலாக முற்றிலும் படுத்த படுக்கையாக இருந்தார். உடல்நிலை சரியானவுடன் தனது வழக்கறிஞரை சந்தித்த போது தான் மேற்படி ஒருதலைப்பட்ச உத்தரவான விவரம் தெரிய வந்தது. தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. மேற்கண்ட வழக்கில் மனுதாரர்களுக்கு நல்ல வாதம் உள்ளது. எனவே அசல் வழக்கில் கடந்த 15.12.2023 ம் தேதியில் மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய அனுமதித்து உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

(i) தாவாவில் 1 ம் பிரதிவாதி இம்மனுவில் எதிர்மனுதாரராக சேர்க்கப்படவில்லை. தாவாவில் 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளின் மீது எதிர்மனுதாரர்/வாதி நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், இடைக்கால தடையுத்தரவு கோரியும் தாவா தாக்கல் செய்து, கடந்த 15.12.2023 ம் தேதியில் வாய்தா அன்று பிரதிவாதிகள் யாரும் ஆஜராகாததாலும், தாவாவிற்குரிய பதிலுரை மற்றும் எதிருரை தாக்கல் செய்யப்படாததாலும், மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்படி மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் அனைத்தும் பொய்யானவையாகும். மேற்படி மனுவானது கடந்த 54 நாட்கள் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) 1 ம் மனுதாரருக்கு திடீரென வைரஸ் காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்பட்டு, ஒரு வாரத்திற்கும் மேலாக முற்றிலும் படுத்த படுக்கையாக இருந்ததாகவும், பின்னிட்டு தனது வழக்கறிஞரை சந்தித்த போது தான் மேற்படி ஒருதலைப்பட்ச உத்தரவான

15.12.2023ம் தேதியில் வாய்தா போடப்பட்டு, அன்றைய தினம் மனுதாரர்கள் பதிலுரை மற்றும் எதிருரை தாக்கல் செய்யாததால் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(ii) மேலும் கடந்த டிசம்பர் 2023 முதல் வாரத்தில் 1ம் மனுதாரருக்கு திடீரென வைரஸ் காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்பட்டு, ஒரு வாரத்திற்கும் மேலாக முற்றிலும் படுத்த படுக்கையாக இருந்தார் என்றும், உடல்நிலை சரியானவுடன் தனது வழக்கறிஞரை சந்தித்த போது தான் மேற்படி ஒருதலைப்பட்ச உத்தரவான விவரம் தெரிய வந்தது என்றும், தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், மேற்கண்ட வழக்கில் மனுதாரர்களுக்கு நல்ல வாதம் உள்ளது என்றும், எனவே அசல் வழக்கில் கடந்த 15.12.2023ம் தேதியில் மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய அனுமதித்து உத்தரவிடக் கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் அனைத்தும் பொய்யானவை என்றும், மேற்படி மனுவானது கடந்த 54 நாட்கள் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 1ம் மனுதாரருக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டு, ஒரு வாரத்திற்கும் மேலாக முற்றிலும் படுத்த படுக்கையாக இருந்ததாகவும், பின்னிட்டு தனது வழக்கறிஞரை சந்தித்த போது தான் மேற்படி ஒருதலைப்பட்ச உத்தரவான விவரம் தெரிய வந்ததாகவும் கூறுவது பொய்யானது என்றும், மருத்துவரிடம் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ சான்றிதழ்கள் எதுவும் இம்மனுவில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், வழக்கை காலங்கடத்த வேண்டியே வாய்தா தேதியில் ஆஜராகாமலும், பதிலுரை மற்றும் எதிருரை தாக்கல் செய்யப்படாமலும் இழுத்தடித்து வந்துள்ளார்கள் என்றும், நீதிமன்ற நேரத்தையும் வீணடித்து வந்துள்ளார்கள் என்றும், 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தாவா நிலுவையில் இருக்கும் போது எதிர்மனுதாரர் மீது மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை கேட்டு அ.வ.எண்.44/2024 என்ற வழக்கை தாக்கல் செய்து, அதில் இடைக்கால தடையுத்தரவு கோரி இ.ம.எண்.02/2024 என்ற மனுவும் தாக்கல் செய்துள்ளனர்

